# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 6 இதழ்: 12 செப்டம்பர் : 2022 ரூ.20/-

Volume: 6 Issue: 12 September : 2022 Rs.20/-



# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# சுக்ர வார அஷ்டோத்ர ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**12.08.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ சங்கர விநாயகர் கோவில்**

A.G.S காலனி 2வது மெயின் ரோடு, கொட்டிவாக்கம், சென்னை — 41.

**19.08.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ ரத்னகிரீஸ்வரர் ஆலயம்**

1, 6வது குறுக்கு தெரு, RBI குவாட்டர்ஸ், பெசன்ட் நகர், சென்னை — 600 090.

**26.08.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ புஷ்பவள்ளி அம்மன் கோவில்**

NGO காலனி, சூளைமேடு, சென்னை — 600 094.

**02.09.2022 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில்**

ஸ்ரீ புவனேஸ்வரி நகர், ஸ்ரீ பாலகிருஷ்ணா நகர், மேட்டுக்குப்பம், நெற்குன்றம், சென்னை — 600 107.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 36

**தே[1]ந. த்[1]யக்[1]தே[1]ந பு[4]ஞ்ஜீதா[2]:/**

-ஈசாவாஸ்யோப[1]நிஷத்[1]

**பொருள் :** தியாகத்தினாலேயே ஆநந்தத்தை அடைய வேண்டும்.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

# வேதபாரதி செய்திகள்

(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 6 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி, செ-42.
போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| புரட்டாசி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஔவையார் | 15 |
| ஸ்ரீமத் பாகவதம் | 16 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 19 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 22 |
| தர்மத்தின் குரல் | 23 |
| குழந்தைகள் பகுதி | 24 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 26 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| சிவ பிருந்தாதேவி | 34 |
| ஸ்ரீ மணவாள மாமுனிகள் | 38 |
| பசு சர்வரோக நிவாரணி | 42 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:

எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,

வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## ஒரு நிமிடம் உங்களோடு...

# 50. ஆன்மிகம்

**"ஆன்மிகம்''** (தெய்வீகத்தன்மை) என்றால் கோயிலுக்கு போய் நேர்த்திக்கடன்களும் (வழிபாடுகளும்) பூஜைகளும் செய்வது அல்ல. சமர்ப்பணம், ஆழ்ந்த ஈடுபாடு வேண்டும். நாம் உண்மையாக இருந்தால், நமக்கு ஒரு பிரச்சனை வரும்போது அந்த பிரச்சனைக்கு ஒரு பரிகாரம் காண சரியான நேரத்தில் ஒரு சரியான உதவியாக ஏதாவது ஒரு ரூபத்தில் பகவான் கட்டாயம் வருவார்.

அர்ஜுனன் யுத்தத்திற்கு முன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை தனக்கு சாரதியாக இருக்க வேண்டும் என்று கேட்கபோகிறான். அந்த நேரம் துரியோதனனும் அங்கு வந்தான். இருவரும் வரும்போது ஸ்ரீ கிருஷ்ணன் உறங்கிக்கொண்டிருந்ததால் துரியோதனன், கிருஷ்ணன் கண்விழித்ததும் தன்னைத்தான் காணவேண்டும் என்று அவர் தலைப்பகுதியில் உட்கார்ந்தான். அர்ஜுனன் அவருடைய கால்பகுதியில் அமர்ந்தான். கிருஷ்ணன் கண்விழித்ததும் கீழே பார்த்தான். அங்கு அர்ஜுனன் இருந்தான். ஆனால் துரியோதனன் தான்தான் முதலில் வந்ததாகவும், தனக்குத்தான் முதலில் உதவவேண்டும் என்றும் கூற கிருஷ்ணன் "உனக்கு நான் வேண்டுமா அல்லது என் படைகள் வேண்டுமா?'' என்று கேட்டார். துரியோதனன் படைகள் வேண்டும் என்றான். அர்ஜுனன் தனக்கு பகவான்தான் வேண்டும் என்றான். பகவான் போதும் என்று அர்ஜுனன் நினைத்ததால்

அவன் தளர்ந்தபோது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவனுக்கு உபதேசம் நல்கினார்.

நம்முடைய மனதின் சக்திக்கும், பக்திக்கும் தகுந்தாற்போல் பிரச்சனை வரும்போது ஒரு யதார்த்த நேரத்தில் ஒரு யதார்த்த நபர் வந்து நமக்கு வழிகாட்டுவார் என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. பகவானின் அனுக்கிரஹம் என்பது நாம் கேட்பதை எல்லாம் நமக்கு பகவான் தருவது என்பதல்ல. ஒரு பிரச்சனை வரும்போது அதை எப்படி சமாளிப்பது என்பதற்கான அறிவை நமக்கு பகவான் உண்டாக்குவார். கீதையில் இதைத்தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.

**தேஷாம் ஸததயுக்தாநாம் ப$_4$ஜதாம் ப்ரீதிபூர்வகம்/**
**த$_3$தா$_3$மி பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$ம் தம் யேன மாமுபயாந்தி தே//**

**(கீதை 10-10)**

**பொருள் :** என்றும் யோக முயற்சியோடு அன்புடன் என்னை வழுத்துபவர்களுக்கு புத்தியோகம் வழங்குகிறேன். அதனால் அவர்கள் என்னை அடைகிறார்கள்.

"யார் என்னை அன்போடு பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு வேண்டிய சமயத்தில் எப்படி அந்த சந்தர்ப்பத்தை கையாள்வது என்று நான் யார் மூலமாகவாவது பிரகாசிக்க வைப்பேன் என்கிறார் பகவான்.

பகவானை நினைத்துக்கொண்டு ஒரு கர்மம் செய்து ஒரு பிரச்சனை வந்தால் பதற்றம் அடைய மனதை அனுமதிக்காமல் பகவான் காப்பாற்றாமல் இருக்கமாட்டார் என்று நினைத்து மனதை ஒரு

நிமிடமாவது பகவானிடம் சமர்ப்பித்தால் பகவான் நம்முடைய புத்தியை பிரகாசிக்கவைப்பார். அதாவது யார் மூலமாகவாவது நமக்கு உதவுவார்.

**D. சூரியநாராயணன்**

## வேதபாரதி செய்திகள்

***அக்டோபர் மாதம் 2022 ஆம் ஆண்டு 9—ம் ஆண்டில் உங்கள் ஆதரவுடன் அடியெடுத்து வைக்கிறது.***

வாசகர்கள், கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள், சந்தாதாரர்கள் எல்லா நலமும் பெற்று வாழ வேதபாரதி வாழ்த்துகிறது.

அடுத்த மாதம் முதல் புதிய கட்டுரைகள், புதிய பொலிவுடன் அதிக பக்கங்களுடன் தங்கள் இல்லம் தேடி வரவுள்ளது.

- ஆசிரியர்.


## வேதபாரதி புதுச்சேரி நடத்தும்
## ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம்,
## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம்

நாள் : 04.09.2022

இடம் : ஸ்ரீ சங்கர வித்யாலயா, ECR ரோடு, புதுச்சேரி

அனைவரும் வருக, வருக.

**மேலும் தொடர்புக்கு :**

**9842607476 / 9443337023**

# அட்டைப்பட விளக்கம்
# நவராத்திரி

நாம் கொண்டாடும் பண்டிகைகள் எல்லாம் இந்து சமய மக்களின் பாரம்பரிய பண்பாட்டை வளர்க்கக்கூடியவை. நாம் கொண்டாடும் பண்டிகைகள் வெறும் பொழுது போக்கிற்காக கொண்டாடப்படுவதில்லை. ஒவ்வொரு பண்டிகைக்கும் ஆன்மீகத்துடன் தொடர்பு உடைய ஆழமான காரணங்கள் உண்டு. ஒவ்வொரு பண்டிகையும் நாம் வணங்கும் ஒவ்வொரு கடவுளைச் சார்ந்ததாக இருக்கும். ஆண்களுக்கு என்று சில பண்டிகைகளும், பெண்களுக்கு என்று சில பண்டிகைகளும், எல்லோருக்குமான சில பண்டிகைகளும் உண்டு. பெண்களுக்கான பண்டிகைதான் **“நவராத்திரி”**.

**“நவராத்திரி”** என்பதற்கு ஒன்பது இரவு என்பது பொருள். ஒவ்வொரு வருஷமும் புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களும் நவராத்திரி. இது நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

**“உலகம் அனைத்தும் சக்தி மயம்”** என்கிற தத்துவத்தை விளக்க வந்ததே **“நவராத்திரி”**. கீழ்க்கண்ட **“தேவி மஹாத்மியம்”** ஸ்லோகம் இதை விளக்குகிறது.

**யாதேவிஸர்வபூ தேஷு சக்திரூபேனே ஸமஸ்திதா**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:**

(ஸ்ரீ தேவி மஹாத்மியம் 291-293)

உலகில் உள்ள அனைத்து உயிர்களிலும் தேவியானவள் உலவுகிறாள் என்பதால்தான் எல்லா உருவங்களிலும் அவளை பூஜிப்பதற்காகவே கொலுவில்

புழு பூச்சிகள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், கடவுள்கள் பொம்மைகள் வைக்கிறோம்.

நாம் கொண்டாடும் எல்லா பண்டிகைகளுமே ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் கொண்டாடப்படும் பண்டிகைகள்தான் ஆனால் **"நவராத்திரி"** மட்டுமே பெண்களால் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. இது பக்தி, பண்பாடு, கலாச்சாரம் நிறைந்த பண்டிகை மட்டுமல்லாமல் விருந்தோம்பல், கலைத்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தும் பண்டிகை. ஆகையால் இது ஒரு முழுமையான பண்டிகை.

ஒன்பது நாட்களும் துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்களுக்கும் தினமும் அர்ச்சனைகளும், ஆராதனைகளும் செய்து பெண்கள் குழுவாக அமர்ந்து **"ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்', "ஸ்ரீ லக்ஷ்மி ஸஹஸ்ரநாமம், ஸ்ரீமஹிஷாசுர மர்த்தினி, அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்ரம்"** ஆகிய ஸ்லோகங்களைச் சொல்ல வேண்டும்.

இவற்றோடு ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய **"ஸ்ரீசௌந்தர்ய லஹரி"** ஸ்லோகம் ஒன்பது நாட்களும் சொல்ல வேண்டிய மிக முக்கியமான ஸ்லோகமாகும்.

தினமும் பூஜை செய்யும்போது "ஸ்ரீசௌந்தர்ய லஹரி"யின் முதல் ஸ்லோகமான **"சிவ சக்த்யா யுக்தோ யதி பவதி...** என்பதில் துடங்கி 12ஆவது ஸ்லோகமாகிய **"த்வதீயம் ஸௌந்தர்யம்...** என்பது வரை ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் ஒவ்வொரு புஷ்பம் வீதம் (அரளி, செம்பருத்தி, சிகப்பு ரோஜா இவை விசேஷமானவை) சமர்ப்பித்தது தூப தீபம் காட்டி பானகம் அல்லது சித்ரான்னம் நைவேத்யம் செய்து முடிவில்

**"ஸ்ரீசௌந்தர்ய லஹரி"** *யின் 100 ஆவது ஸ்லோகமான*

**ப்ரதீப-ஜ்வாலாபிர்-திவஸகர-நீராஜனவிதி...**

*என தொடங்கும் ஸ்லோகத்தைச் சொல்லி கற்பூர தீபாராதனை காட்ட வேண்டும். பிறகு வீட்டில் உள்ள பெண்கள் எல்லோருமாக சேர்ந்து கீழ்க்கண்ட நமஸ்கார ஸ்லோகங்களைச் சொல்லி நமஸ்காரம் செய்து ஆரத்தி எடுத்து பூஜையை முடிக்க வேண்டும்.*

**மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே/**
**மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹிமே ஸதா//**
**ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த சாதகே/**
**சரண்யே த்ரயம்பகே தேவீ நாராயணீ நமோஸ்துதே//**

*இந்த வருடம் நவராத்திரி* **26.09.2022 திங்கட்கிழமை** *ஆரம்பமாகிறது. நவராத்திரி பண்டிகையைக் கொண்டாடி அம்பிகையின் அருளைப்பெறுவோமாக.*

**D. சூரியநாராயணன்**

உ

# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022
## வேதபாரதி - திருச்சி



**உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம். நவம்பர் மாதம் திருச்சியில் நடக்க உள்ள காயத்ரி ஜப ஹோமத்திற்கு கலந்து கொள்ள பெயர் கொடுக்க அன்புடன் அழைக்கிறோம்.**

மேலும் தொடர்புக்கு :

**9994735517 / 9443453053 / 9443143697**

## சுபக்ருது வருஷம் - புரட்டாசி மாத விசேஷங்கள்

**(செப்டம்பர் 18.09.2022 முதல் அக்டோபர் 17.10.2022 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *21.09.2022* | *புர 4* | *புதன்* | *ஏகாதசி* |
| *22.09.2022* | *புர 5* | *வியாழன்* | *ஸன்யஸ்த்த மஹாளயம்* |
| *23.09.2022* | *புர 6* | *வெள்ளி* | *பிரதோஷம்* |
| *25.09.2022* | *புர 8* | *ஞாயிறு* | *அமாவாஸை* |
| *26.09.2022* | *புர 9* | *திங்கள்* | *நவராத்திரி ஆரம்பம்* |
| *29.09.2022* | *புர 12* | *வியாழன்* | *சதுர்த்தி* |
| *01.10.2022* | *புர 14* | *சனி* | *சஷ்டி* |
| *04.10.2022* | *புர 17* | *செவ்வாய்* | *ஸரஸ்வதி பூஜை* |
| *05.10.2022* | *புர 18* | *புதன்* | *விஜயதசமி* |
| *06.10.2022* | *புர 19* | *வியாழன்* | *ஏகாதசி* |
| *07.10.2022* | *புர 20* | *வெள்ளி* | *ப்ரதோஷம்* |
| *08.10.2022* | *புர 21* | *சனி* | *சதுர்த்தி* |
| *09.10.2022* | *புர 22* | *ஞாயிறு* | *பௌர்ணமி* |
| *10.10.2022* | *புர 23* | *திங்கள்* | *அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தி* |
| *13.10.2022* | *புர 26* | *வியாழன்* | *சதுர்த்தி* |
| *15.10.2022* | *புர 28* | *சனி* | *சஷ்டி* |

### 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை - அமாவாஸை

*ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ, கன்யாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து பானு வாஸர யுக்தாயாம் உத்ரபல்குணீ நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம்*

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. **சூரியநாராயணன்** பகுதி - 41

## அத்தியாயம் – 2

## "ஸாங்கிய யோகம்"

**கர்மஜம் பு3த்3தி4புக்தா ஹி ப2லம் த்யக்த்வா மநீஷிண:/**
**ஜந்மப3ந்த4 விநிர்முக்தா: பத3ம் க3ச்சந்த்யநாமயம்//**

*(கீதை 2-51)*

*பொருள் : நடுவு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்து பிறவித்தளை நீக்கி கேடில்லா பெரு நிலையை அடைகின்றனர்.*

*பக்தி தொண்டில் ஈடுபடும் பக்தர்கள் துன்பத்துக்கு ஏதுவான இவ்வுலக வாழ்க்கையை துன்பமற்றதாக செய்துகொள்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் பிறப்பு, இறப்பின் பந்தத்திலிருந்து விடுபட்டு எல்லா துன்பங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைகிறார்கள்.*

**யதா3 தே மோஹகலிலம் பு3த்3தி4ர்வ்யதிதரிஷ்யதி/**
**ததா3 கூந்தாஸி நிர்வேத3ம் ஸ்ரோதவ்யஸ்ய ஸ்ருதஸ்ய ச//**

*(கீதை 2-52)*

**பொருள் :** *பகவான் அர்ஜுனனிடம் கூறுகிறார். "எப்பொழுது உன்னுடைய புத்தி மோஹம் என்றசேற்றைமுற்றிலுமாகக் கடந்துவிடுகிறதோ, அப்பொழுது நீ கேட்டது, கேட்கப்படுகிறவை ஆகிய இரண்டிலும் உனக்கு வேதனை ஏற்படாது. இரண்டிலும் நீ சம நிலை உடையவனாகிவிடுவாய்".*

*நம்முடைய மனது எப்போது ஆத்மாவைப்*

*பற்றிய ஞானத்தை முழுமையாக பெறுகிறதோ, அப்போது விவேகம் உண்டாகும். விவேகம் உண்டானதும் உண்மை விளங்கும். உலக நடைமுறையில் உண்மையை அறிந்து கொண்டவனின் உள்ளத்தில் மனக் குழப்பங்களோ, எந்தவிதமான தடுமாற்றங்களோ ஏற்படுவதில்லை.*

**ஸ்ருதிவிப்ரதிபன்னா தே யதா$^{3}$ ஸ்தாஸ்யதி நிஸ்சலா/**
**ஸமாதா$^{3}$வசலா பு$^{3}$த்$^{3}$தி$^{4}$ஸ்ததா$^{3}$ யோக$^{3}$மவாப்ஸ்யஸி//**

*(கீதை 2-53)*

**யதா** = *எப்பொழுது,* **ச்ருதிவிப்ரதிபன்னா** = *கேட்டுக் கலக்கமடைந்துள்ள,* **தே** = *உன்னுடைய,* **புத்தி** = *புத்தியானது,* **ஸமாதௌ** = *சமாதியில், பரமாத்மாவிடத்தில்,* **நிஸ்சலா** = *சலிக்காததாய்,* **அசலா** = *உறுதியாய்,* **ஸ்தாஸ்யதி** = *நிற்குமோ,* **ததா** = *அப்பொழுது,* **யோகம்** = *புத்தியோகத்தை, ஞானத்தை* **அவாப்யஸி** = *அடைவாய்.*

**பொருள் :** *பற்பல வசனங்களைக் கேட்டுச் சஞ்சலமாகியுள்ள உன்னுடைய புத்தி, எப்பொழுது பரமாத்மாவிடம் அசையாமல் மேலும் திடமாக நிலைபெறுகிறதோ, அப்பொழுது யோகத்தை அடைவாய்-நீ பரமாத்மாவிடம் நிரந்தரமாக ஒன்றிடுவாய்.*

**விளக்கம் :** *பகவான் அர்ஜுனனிடம், அர்ஜுனா, நீ பலவகையான வேத வாக்கியங்களைக் கேட்டு நிலை குலைந்துபோயிருக்கிறாய் உனது புத்தி எப்போது பரமாத்ம ஸ்வரூபத்தில் நிலைபெற்று அசையாமலும், உறுதியாகவும் நிற்கிறதோ அப்போதுதான் நீ சமத்துவ யோகத்தை அடைவாய். அதுவே குறைவற்றபரமபதம் கலங்கியிருக்கும் உனது புத்தியானது சமாதியில் எந்த*

சமயத்தில் உறுதியடைகிறதோ அப்போது நீ மரணமில்லா பெருவாழ்வு அடைவாய்” என்கிறார்.

மனது ஒடுங்கி ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருந்தால் அது **“சமாதி’’** என்று சொல்லப்படுகிறது. அப்பொழுது ஆத்ம சொரூபத்தின் பெருமையை அதுவே சொல்லும். அந்த நிலையில் ஞானமும், யோகமும் பூர்த்தியாகிவிடுகின்றன. மனிதன் அடையவேண்டிய பெரு நிலையை பெற்றவனாகிறான்.

இதற்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம் கூறியுள்ளார். “முதலில் ஈஸ்வரனை நாடி, அப்பால் உலகப்பொருள்களைத்தேடு. இதற்கு மாறாகச் செய்யாதே. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு உலக வாழ்க்கையில் பிரவேசித்தால் உனக்கு மனச்சஞ்சலமே இராது”.

அடுத்து அர்ஜுனன் பகவானிடம் ஒரு கேள்வி கேட்கிறார். அது என்ன?

கீதை தொடரும்...

# கொலுப்போட்டி

நங்கநல்லூர், பாண்டிச்சேரி, ஊரப்பாக்கம் ஊர்களில் வருடந்தோறும் நடக்கும் கொலுப்போட்டி இந்த வருடமும் நடைபெற உள்ளது.

தொடர்புக்கு :

| | | |
|---|---|---|
| **ஊரப்பாக்கம்** | ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி | **9840838378** |
| **நங்கநல்லூர்** | ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி | **7397492703** |
| | ஸ்ரீ ஸ்ரீராம் | **9940331255** |
| **பாண்டிச்சேரி** | ஸ்ரீ பட்டாபிராமன் | **9842607476** |

## ஔவையார்

*ஒவ்வொரு மாதமும் "ஔவையார்" அருளிய* **நல்வழி** *நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.*

### பாடல் 29

**கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்**
**எல்லாரும் சென்றாங் கெதிர்கொள்வர் – இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்; மற்றீன்றெடுத்த தாய் வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற் சொல்.**

**பொருள் :** *கையில் பொருள் (பணம்) வைத்திருப்பவன் ஆயின், அவன் அறிவு இல்லாதவன் ஆனாலும், அவன் வரும்போது அவனிடம் எல்லோரும் சென்று எதிர்கொண்டு வரவேற்பர். கையில் பொருள் (பணம்) இல்லாத ஏழையாக இருந்தால் அவனை அவன் மனைவியும் விரும்பமாட்டாள். பெற்றடுத்த தாயும் விரும்பமாட்டாள். அவன் வாயிலிருந்து வரும் சொற்கள் செல்லாக் காசுகள் ஆகிவிடும்.*

**விளக்கம் :** *இந்த பாடல் மிகவும் பொருள் பொதிந்த பாடல் . பணம்தான் ஒரு மனிதனுக்கு புத்துணர்ச்சியும், தெம்பும், புகழும், மற்றவர்களிடம் மரியாதையையும் வழங்குகிறது.*

*வள்ளுவன் இதைத்தான் கூறுகிறார்*

**இல்லாரை எல்லாம் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு. (குறள் 752)**

*பணம் இல்லாதவன் பிணம் / பணமென்றால் பிணமும் வாய் திறக்கும். பணம் பாதாளம் வரையிலும் பாயும். இவை எல்லாம் பழமொழிகள்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி

பகுதி - 21

*பகவானின் அவதாரங்கள் தொடர்ச்சி.................*

**15. பகவானின் பதினைந்தாவது அவதாரம் "வாமன" அவதாரம்**

*பிரஹலாதனின் பேரனான "மஹாபலி" அசுரர் குலத்தில் பிறந்திருந்தாலும், நீதி நெறி தவறாது தர்மத்தை கடைபிடித்த ஒரு சிறந்த சக்ரவர்த்தியாக வாழ்ந்துவந்தான். சிறந்த விஷ்ணுபக்தன் இவனுக்கு அருள்புரியவே பகவான் மஹாவிஷ்ணு* **"வாமன"** *அவதாரம் எடுத்தார். புரட்டாசி மாதம், சுக்ல பட்க்ஷம் திருவோண (சிரவண) நட்சத்திரத்தில் முதல் அம்சமான அபிஜித் பாதத்தில் சூரியன் நடுப்பகலில் பிரகாசிக்கும் நேரத்தில் கச்யபருக்கும் அதிதிக்கும் புத்திரனாக அவதரித்தார்.*

*நர்மதை நதிக்கரையில் யாகம் செய்து கொண்டிருந்த பலிச்சக்ரவர்த்தியின் யாகசாலையை அடைந்து மூன்று அடி நிலம் கேட்கிறார்* **"வாமனர்"**. *மூன்றாவது அடிக்கு இடம் இல்லை என்றதும் பலிச்சக்ரவர்த்தி பகவான் முன் குனிந்து நின்றதும் பகவான் தன்னுடைய பாதத்தை மஹாபலியின் சிரஸில் வைத்து அழுத்தி பாதாள லோகத்திற்கு அனுப்பியதாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் ஸ்ரீமத் பாகவதத்திலோ அல்லது ஸ்ரீமன் நாராயணீயத்திலோ பகவான் தன்னுடைய காலை மஹாபலியின் சிரசில் வைத்து அழுத்தியதாக கூறப்படவில்லை.*

*மஹாபலி தன் சிரசைக் காண்பித்து* **"ஹே பகவான் மூன்றாம் அடிக்கு என் சிரசின் மீது தங்கள் காலடியை வைக்கலாம், அதனால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் நான் ஏற்றுக்கொள்ள சித்தமாக**

**இருக்கிறேன்''** என்று கூறி பகவானிடம் சரணடைகிறான். (பா 1-3-19)

வாமன அவதாரம் நமக்கு சில உண்மைகளை உணர்த்துகிறது.

1. ஒருவன் எந்தகுலத்தில் பிறந்தாலும் நேர்மையாக, உண்மையாக தர்ம கார்யங்களில் ஈடுபட்டு கொடுத்த வாக்கை காப்பாற்றினால் அவன் மிக உயர்ந்த நிலையை அடையலாம். மஹாபலி அசுரர் குலத்தில் பிறந்தாலும் அவனுடைய நேர்மை அவனுக்கு மோட்க்ஷத்தை அளித்தது.

2. ஒருவன் செய்யும் நல்ல காரியங்களை தடுக்க முயற்சித்தால் என்னவாகும் என்பதை குரு சுக்ராச்சாரியரின் கண் குருடான சம்பவம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

3. ஒருவன் தன்னிடம் சரண் அடைந்தால் அவனை பகவான் காப்பாற்றுவார் என்றசரணாகதியின் தத்துவத்தை இந்த சரித்திரம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

கேரளாவில் வாமன அவதாரத்தை கொண்டாடும் விதமாக பத்து நாட்கள் **"ஓணம்"** பண்டிகை மிக சிறப்பாக கொண்டாடுவார்கள்.

**16. பகவானின் பதினாறாவது அவதாரம் "பரசுராமர்" அவதாரம் :**

லோகத்தில் க்ஷத்திரிய மன்னர்களின் 21 தலைமுறைகளை கருவறுக்கவே பகவான் "பரசுராமர்" அவதாரம் எடுத்தார்.

த்ரேதா யுகத்தில் சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னி மஹரிஷியும் அவரது பத்தினி ரேணுகாதேவியும் சிவனை நோக்கி தவம் செய்தார்கள். அந்த தவத்தின் பயனாக ஜமதக்னி தம்பதியருக்கு ஐந்தாவது புத்ரனான மஹாவிஷ்ணு வைசாக மாத சுக்லபக்ஷத்ருதீயை இரவின் முதல் யாமத்தில்

புனர்வஸூ நக்ஷத்ரத்தில் அவதரித்தார். குழந்தைக்கு **"ராமபத்ரா"** என பெயர் சூட்டினார்கள். இவர் சிவனை நோக்கி கடும் தவம் இருந்ததால், அந்த தவத்தை மெச்சிய சிவன் இவர் முன் தோன்றி தெய்வீக கோடாரியை ராமபத்ராவுக்கு வழங்கினார். கோடாரிக்கு **"பரசு"** என பெயர். அன்று முதல் அவருக்கு **"பரசுராமர்"** என்றபெயர் நிலைத்துநின்றது.

பரசுராம அவதாரம் ஸ்ரீநரஸிம்ம அவதாரம்போல் ஒரு ஆவேச அவதாரம். தசாவதாரத்தில் ஒரு அவதாரம் மற்றொரு அவதாரத்தை சந்தித்துக்கொண்டது மிகவும் அரிது. ஆனால் பரசுராமரும் விஷ்ணுவின் மற்றொரு அவதாரமான ராமரும் சந்தித்துக்கொண்டார்கள். ராமாயண காலத்திலும், மஹாபாரத காலத்திலும் இருந்த ஒரே அவதாரம் என்றசிறப்பு ஸ்ரீபரசுராம அவதாரத்துக்கு உண்டு. *(1-3-20)*

அவதாரங்கள் தொடரும்..

---

உ

ஸ்ரீ குருவே சரணம்

## வேதபாரதி

புனித பாரதத்தின் 75ம் ஆண்டு சுதந்திர தேசத் தலைவர்களைப் புகழ்ந்து பாடி, வேதபாரதியில் படிக்கும் குழந்தைகள் 46 காணொலி மூலம் பதிவு செய்து அனுப்பியுள்ளார்கள். எல்லா குழந்தைகளுக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் அனுப்ப உள்ளோம். குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் உளமார வாழ்த்துக்கள். ஸ்லோக வகுப்பு பொறுப்பாளர் ஸ்ரீமதி நீலா முரளிதரன் ஏற்பாடு செய்தார்கள்.

- ஆசியர்

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 3 அவதார மஹிமை பாகம் 11**

## அத்தியாயம் – 3

## குழந்தை பருவம்

*குழந்தை சங்கரனின் வாக்கிலிருந்து வந்த முதல் ஸ்துதிதான்* **"கனகதாரா ஸ்தோத்திரம்'. "கனக"** *என்றால்* **"தங்கம்", "தாரா"** *என்றால் தொடர்ந்து பொழிவது என்று பொருள்.*

*அந்த ஏழை குடும்பத்தின் வறுமை நீங்க ஸ்ரீமஹாலக்ஷ்மியை துதித்து வேண்டி பாடினான் குழந்தை சங்கரன். இதில் மொத்தம் 21 ஸ்லோகங்கள் உள்ளன. எல்லா ஸ்லோகங்களிலும் மஹாலக்ஷ்மியை வர்ணித்து போற்றி பாடியுள்ளார். ஆனால் எட்டாவது ஸ்லோகத்தில்மட்டும் அந்த ஏழை பிராமண ஸ்திரீக்காக முறையிடுகிறார்.*

**தத்யாத்தயானுபவனோத் த்ரவிணாம்புதாராம்**
**அஸ்மின்னசிஞ்சன விஹங்கஸிஸௌ விஷண்ணே/**
**துஷ்கர்மகர்மமபனீய சிராயதூரம் நாராயணீ**
**நாராயணப்ரணயினீ நயனாம்புபவாஹ://**

*ஸ்லோகத்தின் நான்காவது, (கடைசி) வரியில் லக்ஷ்மி தேவியை* **"நாராயண ப்ரணயினீ"** *என்று அழைக்கிறார். அதாவது நாராயணனின் பிரியை என்று அழைக்கிறார். சாதகப் பக்ஷியின் குஞ்சு பசியிலே வீல் வீல்ன்னு கத்துமாம். அதுமாதிரி இவள் வறுமையிலே இருக்காளே. அம்மா இவளுக்கு* **"துஷ்கர்மா"** *இருக்குதான். வினைகளால்தான் இவள் கஷ்டப்படுகிறாள். நான் உன்கிட்ட வேண்டிக்கிறேன்.*

உன்னிடம் தயை என்கிற காற்று இருக்கிறதல்லவா? அந்த காற்றினால் உன் கடாக்ஷ மேகத்தைத் தள்ளிக்கொண்டு வந்து இவர்களுக்குச் செல்வ மழையை பொழியம்மா'' என்று பிரார்த்திக்கிறார்.

சங்கரனின் வார்த்தைகளை செவிமடுத்த லக்ஷ்மிதேவி மனம் மகிழ்ந்து அந்த வீட்டிற்கு சுபிட்க்ஷத்தை அளித்தாள். அந்த வீட்டில் வறுமை ஒழிந்து ஐஸ்வர்யம் உண்டாயிற்று. லக்ஷ்மி தேவி அந்த வீட்டில் தங்க நெல்லிக்கனிகளை மழையாக பொழிந்தாள் என்று ஊர் மக்கள் கூறினார்கள்.

நம் எல்லோருடைய நம்பிக்கையும் லக்ஷ்மி தேவி அந்த இல்லத்தில் தங்க நெல்லிக்கனிகளை மழையாக பொழிந்தாள் என்பதுதான். பகவானின் வைபவங்கள் நம் கண்களுக்குத் தெரியாது. வைபவங்களை ஈஸ்வரன் நாம் பார்த்து அதிர்ச்சிபடாதவாறுதான் செய்வார்.

நெல்லிக் கனிகள் மழை பொழிந்த வீடு இன்றும் காலடியில் உள்ளது. அந்த வீட்டிற்கு **"ஸ்வர்ணத்து மன" (பொன்னூர் கோட்டு மன")** என்று பெயர். **"ஸ்வர்ணம்''** என்றால் மலையாளத்தில் **"தங்கம்"** என்றும் **"மன"** என்றால் **"வீடு"** என்றும் பொருள். காலடியிலிருந்து இந்த **"ஸ்வர்ணத்து மனை''** சுமார் 22 கிமீ தூரத்தில் உள்ள **"பழத்தோட்டம்"** என்று சிறிய கிராமத்தில் உள்ளது.



எட்டாம் நூற்றாண்டில் குழந்தை இங்கு வந்த சமயம் இந்த வீடு ஒரு சிறிய ஓட்டு வீடாக இருந்தது.

*தற்போது உள்ள இந்த வீடு சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. தற்போது அந்த வீட்டில் அந்த வம்ஸத்தில் வந்த ஒரு நம்பூதிரி குடும்பம் வசித்துவருகிறார்கள்.*

*காலடிக்கு வரும் பலரும் இந்த கிராமத்திற்கு வந்து இந்த வீட்டின் திண்ணையில் அமர்ந்து தியானம் செய்துவிட்டு* **“கனகதாரா ஸ்லோகம்”** *சொல்லுவார்கள். வீட்டிற்குள் நுழைய யாருக்கும் அனுமதிகிடையாது.*

*8 - ஆம் நூற்றாண்டில் நடந்த இந்த அதிசயத்தையொட்டி ஆண்டுதோறும் காலடியில் உள்ள திருக்காலடியப்பம்ன என்ற கிருஷ்ணன் கோயிலில் கனகதாரா யாகம் நடத்துகிறார்கள். ஆதி சங்கரரின் 32 வயதை குறிக்கும் வகையில் 32 நம்பூதிரிகள் 1008 முறை கனகதாரா ஸ்லோகத்தை ஜபித்து அர்ச்சனை செய்வார்கள்.*

*தொடரும்..*

## புதுமனை புகுவிழா

**05.09.2022 திங்கட்கிழமை**

*நங்கநல்லூர் வேதபாரதி ஒருங்கிணைப்பாளர்*

**சிரஞ்சீவி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி**

**சௌபாக்யவதி சிவகாமி**



தம்பதியரின் புதுமனை புகுவிழா

சென்னை, பம்மலில்

சிறப்பாக நடைபெற.

வேதபாரதியின் வாழ்த்துக்கள்

*ஆசிரியர்*

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# பலர் சொல் விளைவிக்கும் மனமாற்றம்



சென்றமாத தொடர்ச்சி....


சற்று நேரம் கழித்து திடீரென்று மூன்றாவது திருடன் சோமயாஜியின் எதிரே தோன்றினான். பாசாங்குடன் கூடிய மரியாதையோடு, அவன் சோமயாஜியின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். பிறகு மிகவும் பணிவோடு, 'நான் சொல்லப்போகும் விஷயத்தைக் கேட்டு, என் மீது கோபம் கொள்ளாமல், என்னை தயவு செய்து மன்னித்துவிடுமாறு முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன். உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒரு கையில் கமண்டலுவை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; மற்றொரு கையால் மூன்று நாய்களைக் கட்டி இழுத்துச் செல்கிறீர்கள். இந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு மிகவும் வித்தியாசமாகவும், முரண்பாடாகவும் உள்ளது'' என்று கூறி போலியாய் வியந்தான். இந்தத் தடவை, சந்தேகமின்றி, தான் கூட்டிச் செல்பவை நாய்கள் தான் என்று சோமயாஜிக்கு நிச்சயமாகிவிட்டது.

சோமயாஜி தனக்குள் ஆலோசித்து, "மூன்று பேர்கள் வெவ்வேறு இடங்களிலே ஒரே கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். எனக்கு வயதானதால், கண்பார்வை சிறிது குறைந்துவிட்டது போலிருக்கிறது.

தொடரும்......

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்



*சென்ற மாத தொடர்ச்சி 3-5 :*

எடுத்துக்காட்டாக, த்வஷ்ட்ரன் என்று ஒரு அசுரன் இருந்தான். இந்திரன் அவனுக்குப் பகைவன்; இந்திரனுடன் அவன் போரிட்டுக்கொண்டிருக்கிறான். போருக்குப் போகுமுன் அவன் ஒரு யக்ஞம் செய்கிறான். அதன் இறுதியில், பூர்ணாகுதியின் போது இந்திரனின் பகைவனுக்கு வெற்றி உண்டாவதாக என்ற மந்திரத்தை அவன் உச்சாடனம் செய்ய வேண்டும். இந்த மந்திரம் ஏழு அக்ஷரங்களைக் கொண்டது. அவற்றில் முதல் மூன்று எழுத்துக்கள் தாழ்ந்த தொனியிலும், ஐந்தாவது உயர்ந்த குரலிலும், மற்றவை இடைப்பட்ட தொனியிலும் அமைவன. த்வஷ்ட்ரன் இந்த யக்ஞத்தைப் பூர்த்தி செய்துவிட்டால், அவனுடைய வெற்றி உறுதி செய்யப்பட்டுவிடும். அதனால், தேவர்கள், தங்களைக் காப்பாற்றுமாறு, பிரம்மனின் பத்தினியாகிய ஸரஸ்வதிதேவியை வேண்டினர். ஸரஸ்வதிதேவி அவர்களின் வேண்டுகோளை ஏற்றார். தன்னுடைய யோக சக்தியால், த்வஷ்டரனின் நாவினில் இடம் பெற்று, சொல்லவேண்டிய அக்ஷரங்களின் தொனியில் வேறுபாடுகளை ஏற்படுத்தினார். இரண்டாவது எழுத்து உயர்ந்ததும் மற்றவையெல்லாம் இடைப்பட்ட நிலையாகவும் இந்த மாற்றம் அமைந்தது.

தொடரும்..

# குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*



*சென்றமாதம், அதாவது ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நம் நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை சிறப்பாகக் கொண்டாடினீர்கள் அல்லவா?*

*செப்டம்பர் மாதமும், அதாவது இந்த மாதமும் உங்களுக்கு ஒரு முக்கியமான மாதம் எப்படி? என்பது தானே உங்கள் கேள்வி?*

**"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"** *என ஆத்திச்சூடியில் பாடியிருக்கிறார் ஔவை பாட்டி.*

*பள்ளியில் படிக்கும் மாணவர்களாகிய உங்களை உங்களுக்கே அடையாளம் காட்டுபவர்தான் உங்களின் ஆசிரியர். அவர் உங்களுக்குத் தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி முதலியவற்றை கற்றுத் தந்து உங்களை நல்லவனாக, சிறந்தவனாக, பண்புள்ளவனாக, ஒரு அறிஞனாக, மேதையாக உயர்த்தும் உன்னத பணியைச் செய்பவர்தான் ஆசிரியர். அப்படிப்பட்ட ஆசிரியரை நீங்கள் கொண்டாட வேண்டாமா? அதற்குதான்* **"ஆசிரியர் தினம்"** *ஆசிரியர் தினம் எப்படி தோன்றியது?*

*ஒரு பள்ளி ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கி ஏராளமான டாக்டர் பட்டங்களைப் பெற்று, நாட்டின் துணை ஜனாதிபதியாகவும் பின் ஜனாதிபதியாகவும் இருந்தவர் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள். ஒரு முறைஅவரிடம் படித்த மாணவர்களும், அவருடைய நண்பர்களும் அவரை அணுகி அவருடைய பிறந்த நாளான*

*செப்டம்பர் 5-ம் தேதியை கொண்டாட அனுமதி கேட்டனர்.*

*அதற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன்* **அவர்கள் "எனது பிறந்த நாளை தனியாக கொண்டாடுவதற்கு பதிலாக, செப்டம்பர் 5-ம் தேதியை நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மரியாதை செலுத்தும் விதமாக ஆசிரியர் தினமாக கடைபிடித்தால் அது எனது பாக்கியமாகவும் பெருமை மற்றும் மரியாதையாக இருக்கும்"** *என்றார்.*

*1962-ம் ஆண்டு அவர் இந்திய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த ஆண்டு முதல் செப்டம்பர் 5-ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் நீங்கள் உங்கள் ஆசிரியர்களுக்கு பரிசுகள் மற்றும் இனிப்புகளை வழங்கி மரியாதையையும், நன்றிகளையும் தெரிவித்து ஆசிரியர் தினத்தை உற்சாகமாக கொண்டாடுங்கள்.*

*உங்கள் அன்புள்ள :* **"வேதபாரதி" தாத்தா**


**"வேதபாரதி"**

மற்றும்

**"ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் டிரஸ்ட்"**

ஆகியோர் இணைந்து வழங்கும்

**"ஔவை விழா 2022"**

போட்டிகள் நடைபெறும் நாள்

**08.10.2022, சனிக்கிழமை**

**காலை 9.00 மணி**

இடம் :


**ஸ்ரீ சங்கர வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,**

**கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.**

தொடர்புக்கு : **7397374638 / 7397460064**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## உண்மையான கல்வி



உண்மையான கல்வி என்பது ஆத்மஞானம் அடைய உதவுவதே ஆகும். ஆத்ம ஞானத்தாலேயே மக்கள் அமரத்துவம் அடைகிறார்கள். எதற்கு மேலாக ஒரு பயன் உலகில் இல்லையோ அந்தப் பயனை உண்மைக்கல்வி அளிக்கிறது. மற்றவிதமான கல்விப் பயிற்சிகளெல்லாம் உலகப் பயன்களைத்தான் அளிக்கின்றன. ஆனாலும் அவையும் படிப்படியாகப் பரமாத்மாவைச் சேர உபயோகப்படலாம். உலகப் பயன் என்பது பொதுவாகப் பொருள் திரட்டுவதையே குறிக்கின்றது. பொருள் கூடப் பலவித தருமங்களைச் செய்யப் பயன்படுகின்றது. லௌகிக தருமங்களும் பிரம்ம ஞானத்துக்குச் சாதகமாகின்றன. "தனக்கு விதிக்கப்பட்ட கர்மங்களைச் சரி வர நடத்துவதாலும், தவத்தினாலும், இறைவனை வணங்கி வழிபடுவதாலும் ஒருவன் ஆத்ம ஞானத்தை அடைகிறான் என ஆதி ஆசாரியர்கள் கூறியுள்ளார்கள்.



மஹான்களின் ஆசிகளுடன்

# மணிவிழா வாழ்த்துக்கள்

ஸ்ரீ ஆர்.சந்திரசேகரன் - ஸ்ரீமதி.மீனாட்சி

நாள் : 03.09.2022, சனிக்கிழமை

இடம் :

ஹார்வி குமாரசாமி மெயின் திருமண மண்டபம்,
திருப்பூர்.



# திருமண வாழ்த்து

நாள் :
05.09.2022, திங்கட்கிழமை

இடம் :
காமாட்க்ஷி ஹால் திருமண மண்டபம்,
தஞ்சாவூர்

ஸ்ரீ சந்திரசேகரன் - ஸ்ரீமதி சுதா தம்பதியிளரின்
ஜேஷ்ட புத்ரனுமான

சிரஞ்சீவி வெங்கடேஷ் (எ) பாலகுமரகுரு

ஸ்ரீ நடராஜன் - ஸ்ரீமதி நீலா தம்பதியாரின்
சீமந்த புத்திரியுமான

சௌபாக்கியவதி ஆயுஷ்மதி (எ) அக்ஷயா

புது தம்பதிகள் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ
வேதபாரதி வாழ்த்துகிறது.



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



**கொடுப்பவர்களுக்குத் தெரியாது, கேட்பது கடவுள் என்று... கேட்பவர்களுக்கு தெரியும், கொடுப்பது கடவுள் என்று...**

அடையாறு கேன்சர் மருத்துவ மனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகளுக்கு சென்னையில் யாருமற்ற சூழ் நிலையில், அவர்களை தனது உறவாக எண்ணி உதவிக் கரம் நீட்டுகிறது நமது நம்ம தர்மசாலா. இங்கு ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவர்களது ஒரு உதவியாளருக்கும் மூன்று வேளை சத்தான, சுவையான, சைவ உணவு; பாதுகாப்பான, சுகாதாரம் நிறைந்த தங்குமிடம் ஆகியவை **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் தங்களுக்கான முறையான சிகிச்சையை தடையின்றி பெற்று விரைவில் நலம் பெறுகிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளின் உயிர் காக்கும் இந்த உயரிய சேவைக்கு உதவுங்கள். காலத்தால் அழியாத பெரும் செல்வமான புண்ணியத்தை உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் சேர்த்திடுங்கள்.


## தலைநகர் தில்லியிலிருந்து ஓர் தர்மவான்...

6.8.2022 மற்றும் 7.8.2022 ஆகிய தினங்களில் **தில்லி முத்தமிழ்ப் பேரவை** மற்றும் **தில்லித் தமிழ்ச் சங்கம்** இணைந்து ஏற்பாடு செய்திருந்த **ஸ்ரீ வேளுக்குடி கிருஷ்ணன்** அவர்களின் சொற்பொழிவு நிகழ்ச்சியில், மனிதநேய பண்பாளர் திரு **V.S.கிருஷ்ணன்** – திருமதி **மைதிலி** தம்பதியர், நமது நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்று நோயாளிகளுக்கு உணவு வழங்கிட ரூ.75,000/– நன்கொடை வழங்கி மகிழ்ந்தனர். நமது நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ண மூர்த்தி அவர்கள் தில்லிக்கு செல்ல இயலாத சூழ்நிலையில், மேற் கூறிய நன்கொடையை தில்லியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் திரு **H.S.சுப்ரமணியன்** அவர்கள் ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பாக பெற்றுக் கொண்டார்.




---

செங்கல்பட்டு – மாமண்டூர் கிராமத்தில், ஆதரவற்ற ஏழை முதியவர்களுக்காக நாம் செயல்படுத்தவிருக்கும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிட அனுமதி வழங்குவதற்காக நமது நிலத்தில் துறை சார்ந்த அதிகாரிகளின் நேரடி ஆய்வு நிறைவடைந்துள்ள நிலையில், துறை சார்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்களின்படி கட்டிட அனுமதிக்கான கட்டணமாக சுமார் 20 லட்சம் ரூபாய் முறையாகவும், முழுவது மாகவும் 17.6.2022 அன்று செலுத்திவிட்டு, கட்டிட அனுமதிக்காக இன்றுவரை காத்திருக் கிறோம். அதன்படி, கட்டிட அனுமதி கிடைக் கப்பெற்றவுடன் நமது இலவச முதியோர்



இல்ல கட்டிட பணிகள் முழு வீச்சுடன் நடைபெறும். வறுமையில் வாடும் ஏழை முதியவர்களுக்காக **முற்றிலும் இலவசமாக** செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு **ரூ.5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**சிந்திப்பீர்! செயலாற்றுவீர்!!**




**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**
**vkrishnamoorthy.smt@gmail.com** **www.srimathatrust.org**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 21

*இனி முக்கியமாக சுதந்திரம், கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் பற்றி சதா குழப்பிக் கொள்ளும் பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரின் பார்வைக்கு சிலவற்றைகூறவிரும்புகிறேன்.*

**“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.”**

*(அதிகாரம்– 41, குறள்– 410)*

*“கல்வி ஒன்று மட்டும் தான் மனிதனை மிருகத்திலும் உயர்ந்தவனாக்கி, அறிவைத் துலங்க வைக்கின்றது. நூல்களை கற்றவர்களோடு கல்லாதவர்களை ஒப்பிடக்கூடாது. அப்படி செய்தால் மனிதனோடு விலங்கை ஒப்பிடுவது போன்றதாகும்” என்கிறார் திருவள்ளுவர்.*

*இதன் அடிப்படையில் பெற்றோர்கள் குழந்தைகளைப் பற்றி அறிய சிறந்த நூல்களை படிக்க வேண்டும். சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடு எனும் நேரெதிர் அர்த்தங்கள் கொண்ட விஷயங்களை 10வது அல்லது 12வது முடித்த மாணவச் செல்வங்களுக்கு எப்படி எடுத்துக் கூறுவது என்று புரிந்து கொள்ள முயற்சியுங்கள்.*

*18 வயதில் ஓட்டுரிமை சுதந்திரம் என்றால் மனதளவில், பார்வையில் புரிந்து கொள்ளுதலில், உணர்வதில் அதே சுதந்திரம் உள்ளதா என்று கவனித்து அதை ஊக்குவிப்பது பெற்றோர்களின் கடமையல்லவா?*

இந்த கட்சித் தலைவர் அழகாக, ஸ்லிம்மாக, சினிமா ஹீரோ போன்று இருக்கிறார். அந்த தலைவர் பேச்சு மயக்குகிறது, நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் தலைவர்கள், வெள்ளைத் தோல், ஜீன்ஸ் பேண்ட் என்றால் மயங்கும் 18 வயதுகாரர்கள் தான் இன்றைய ஓட்டு வங்கி. இவ்வுலகில் உள்ள பல்வேறு சித்தாந்தங்கள், அவை பிறந்த விதம், "ஹீரோ பூஜை" யின்றி தலைவர்களை மனதளவில் அணுகுதல், சித்தாந்தங்களின் நிறைகுறைகள், அவை மனித வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் என்று நம் நாட்டைப் பற்றிய ஓர் பரந்த பார்வை முதலில் உங்களுக்கு தேவை. பல புத்தகங்களைப் படித்து உங்கள் அறிவை அதிகரித்து கொண்டால் தானே உங்கள் ஓட்டுரிமைப் பெற்றமகன் அல்லது மகள் பார்வையை விஸ்தரிக்க முடியும்?

இது கற்றுக் கொள்ள, கற்று கொடுக்கும் சுதந்திரம். பிறகு கட்டுப்பாடு என்பதை எப்படி புகுத்துவது என்று உங்கள் குரல் கேட்கின்றது.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டதால் தான் என் குலம், மொழி, வீடு, பரம்பரை, ஊர், மாநிலம், நாடு ஆகியவற்றைப் புரிந்து கொண்டு, எது இந்த நாட்டிற்கு நன்மை செய்யும் சித்தாந்தம், எது என் ஊரையும், குலத்தையும், வீட்டையும், நாட்டையும் பாதுகாக்கும், எந்த சித்தாந்தம் என் குடும்பத்தாருக்கு நன்மை செய்யும் என்று சுதந்திரமாக அவர்களை யோசிக்க வைத்து ஓட்டுப் போட வைக்கும்.

இந்த சமயங்களில் கட்டுப்பாடு நீங்கள் செய்வதை விட, ஒருபடி அதிகமாகவே அவர்களுடைய மனம் செய்யும். இதுதான் பெற்றோர்களுக்கான வெற்றி. கட்டுப்பாடு என்பதும், சுதந்திரம் என்பது ஒரு மகனுக்கோ அல்லது மகளுக்கோ உள்மனதிலிருந்து

வரும் பொழுது தான் வீட்டிற்கும், நாட்டிற்குமான மிகச் சரியான குடிமகன் உருவாகிறான்.

இதற்கு பெற்றோர்களுக்கு மிகப்பெரிய பணி ஒன்று உள்ளது. அவர்கள் பேசும் பொழுது உன்னிப்பாக கேட்பது. அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் தெரியவில்லை என்றால் தயங்காமல், “தெரியலைப்பா, நீ சொல்லு. கற்றுக் கொள்கிறேன்” என்று அவனுடைய பார்வையை கூர்ந்து கவனித்து வழிநடத்த உங்களால் முடியும் 10வது வகுப்பு முடித்துவிட்டால் “தோளுக்கு மிஞ்சியவன் தோழன்” எனும் உங்கள் பொறுப்பை உணருங்கள்.

இதை முற்றிலும் மறந்து, சதா படிப்பு, மார்க், வெளிநாடு செல்லும் ஆசை என்று வளர்த்துவிட்டு, அங்குள்ள மகன் அல்லது மகள் மீது முதலில் பெருமையும், பிறகு, “க்ரீன் கார்டு” வாங்கிய வருத்தமும், அங்கு போட வேண்டிய “இரட்டை வேஷம்” (வீட்டினுள் பாதி இந்தியத்தன்மை, வெளியில் முழு அமெரிக்கத்தனம்) கண்டு வெதும்புவது என்று எஞ்சிய நாட்களை கழிக்கும் பெற்றோர்கள் தானே அதிகம்.

படிப்பு, மார்க் 60%, நம் வீட்டுச் சூழ்நிலை 20%, நம் நாட்டின் மீதானப் பார்வை 10%, நம் வாழும் மாநிலத்தின் மீதான புரிதல் 10% என்று 10வது வகுப்பு முடித்தவுடன் துவங்கினால் தான் 21 வயதிற்குள் அவர்களுக்குள் தெளிவும், புரிதலும், உணர்தலும் வந்துவிடும். அதற்கு பெற்றோர்கள் உங்கள் அறிதலை, கற்றுக் கொள்வதை அதிகப்படுத்துங்கள்

தொடரும்..

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## ஸ்ரீ சிவபிருந்தாதேவி — 3-ம் பகுதி

## பாரத தேசத்தின் முதல் பெண் ஆதீனம்



*தவத்திரு சாயி பிருந்தாதேவி அவர்கள், திருத்தணியில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களை சந்தித்து, ஆதீனம் ஒன்றை ஏற்படுத்தும் தன் விருப்பத்தை தெரிவித்தவுடன், அவர், "அத்தகைய தகுதி, தங்களைத் தவிர வேறு யாருக்கு இருக்கிறது? என் அப்பன் முருகன் அருளால் அப்படியே நடக்கட்டும். அந்தப் புனித நாளில் நான் அவசியம் பங்கேற்கிறேன்" என்று கூறி ஆசிவழங்கினார். 1983 ம் ஆண்டு, ஜூன் மாதம் 30-ம் தேதி, குருவாரமான வியாழக்கிழமை அன்று,* **"திலகவதியார் திருவருள் ஆதீனகர்த்தர்"** *எனும் பொறுப்பினை மேற்கொண்டார். இந்து சமய வரலாற்றில் பெண் ஒருவர் ஆதீனத்தின் தலைமை ஏற்கும் நன்னாளாகவும், பொன்னாளாகவும் திகழ்ந்தது.*

*அந்தத் திருநாளில், வாரியார் சுவாமிகள், அப்பர் பெருமானுக்கு திருநீறு அளித்து, மீண்டும் சைவத் திருப்பணியைத் தொடரும் காட்சித் திருவுருவப் படத்தை திறந்து வைத்து, "பெரிய புராணத்தில் திலகவதியாரைப்பற்றி பாதிதான் சொல்லியிருந்தார். மீதிப்பாதியை இப்போது பொறுப்பேற்றிருக்கும் அம்மையார் தொடருவார் என்று விட்டுச் சென்றுள்ளார் போலும்" என்று சொன்ன போது*

குழுமியிருந்த சைவ பக்தர்கள் ஆரவாரித்து பெருமகிழ்ச்சியடைந்தனர். பெண்களின் ஆன்மீக மற்றும் சமூகத் தொண்டின் மீதுள்ள ஈடுபாடுகளை மேன்மைப்படுத்தும் வகையில், அருளாட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், 1984-ம் ஆண்டு உலக இந்து மகளிர் மாநாடு ஒன்றைமிகப் பிரும்மாண்டமாக கோவையில் ஏற்பாடு செய்து, அதில் மகளிருக்கென ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்கிற தன் இலக்கையும் வெளிப்படுத்தினார். மாநாட்டில் பங்கேற்றஅருட்செல்வர் நா.மகாலிங்கம் உள்பட பல்வேறு குருமகா சன்னிதானங்கள் இதனை வரவேற்று ஆசீர்வதித்து அருளினார்கள். 1985-ம் ஆண்டு மலேஷித் தலைநகரான கோலாலம்பூரில் உலக இந்து மகளிர் மாநாட்டினை கோலாகலமாக நடத்தினார்கள்.

சுவாமி விவேகாநந்தருக்கு சிகாகோ மாநாடு போல், சிவபிருந்தா தேவிக்கு அமெரிக்க நியுஜெர்சியில் நடைபெற்ற உலக சமய மாநாடு மாபெரும் வெற்றியினைத் தந்தது. இவரது பேச்சாற்றல் அனைவரையும் ஆச்சர்யப்படவைத்தது. பல்வேறு அமெரிக்க நகரங்களில் இவரின் உரையாற்றல் கேட்போரை பிரமிக்கவைத்தது. 1986-ம் ஆண்டு ஜெர்மனியின் ஃபிராங்ஃபிரட் நகரின் அருகே, நடந்த உலக சமய மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றார்.

இந்த அம்மையாருக்கு என்ன தெரியாது? என்று வியக்கும் வண்ணம் இசைத் திறமையும் எழுத்துத் திறமையும் கொண்டவராகத் திகழ்ந்தார். “இது எங்கே?” “மனிதன் எங்கேயோ போகிறான்”, “மனிதனும் தெய்வமாகலாம்”, “இந்துமதம்”, “க்ஷேத்ராடனம்” போன்று பல நூல்களை எழுதியுள்ளார். இவருக்குத்தான் எத்தனை பரிமாணங்கள்! எழுத்தாளர், இசை வல்லுநர், சமூக சேவகர், கல்வியாளர், பேச்சாளர்,

அரசியல்வாதி, ஆதீன கர்த்தர் என்று அனைத்துப் பரிமாணங்களிலும் பொன்னென மிளர்ந்தவர்.

இவர் பெற்றிருக்கும் பட்டங்களின் பட்டியல் மிக நீளமானது. சித்தாந்த செல்வமணி, செம்மொழிச் செல்வி, செந்தமிழ் அரசி, செந்தமிழ் மணி, கருணைக்கடல் மங்கையர்க்கரசி, அருளரசி, திருப்பணி செந்திரு, மாதர்குல மாமணி ஆகியவை அவற்றுள் சில.

**"ஒரு பெண் துறவியின் சமய வாழ்வும் சமூக வாழ்வும்''** என்கிற தலைப்பில் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. அதனை அனைவரும் படித்து மேலும் இவர் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்வது அவசியம். குறிப்பாக பெண்கள் அவசியம் படிக்க வேண்டும். மிகச் சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி. இத்தகைய உன்னத வாழ்க்கை வாழ்ந்து காட்டியுள்ள தவத்திரு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அம்மையார் அவர்கள் 72 வயது இப்பூலகில் வாழ்ந்து, 1998-ம் ஆண்டு நவம்பர் 27-ம் நாள் இறைவனடி சேர்ந்தார். இருப்பினும் இவர் விட்டுச் சென்றபணிகளை இன்றும் தொடர்ந்து மிக நேர்த்தியாக செய்துகொண்டிருக்கிறது திலகவதியார் திருவருள் ஆதீனம் புதுக்கோட்டையில் தஞ்சாவூர் சாலையில் அமைந்துள்ள இந்த ஆதீனத்தின் இப்போதைய ஆதீனமான **"தயானந்த ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகள்''**. காஞ்சிமகா ஸ்வாமிகளால் இளையாத்தங்குடியில் திருநாமம் பெற்றவர் என்பது கூடுதல் செய்தி. இவருடன் சில நிமிடங்கள் தொலைபேசியில் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதுவும் நான் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.

தவத்திரு சிவாபிருந்தா தேவி அவர்கள் பற்றி, திரு.ஆர்.பி.வி.எஸ் அவர்கள் கூறிய சில விவரங்கள் அடங்கிய கட்டுரை தொடரும்.......

# கூடுவாஞ்சேரி மற்றும் ஊரப்பாக்கம் உபாகர்மா நிகழ்வுகள்

நமது சமூகத்தின் முக்கிய நிகழ்வான "உபாகர்மா" என்று அழைக்கப்படும் ஆவணி அவிட்டம் திருநாள் வழக்கம்போல் ஆகஸ்ட் மாதம் 11ந் தேதி வியாழன் அன்று ரிக் மற்றும் யஜுர் வேதத்தினர்களுக்கு ஸ்ரீ M.சுப்பிரமணிய சாஸ்திரிகள் கிரஹத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்றநிகழ்ச்சியில் சுமார் 200 நபர்கள் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்ச்சியின் ஒவ்வொரு பிரிவு இறுதியிலும் மன்னை திரு.இரா.நாராயணசாமி அவர்கள் உபகர்மா, ஸந்த்யாவந்தனம், காயத்ரீ மந்திரத்தின் மகிமையினையும் அவற்றை முறையாக கடைப்பிடிக்கும் வழி முறைகள் மற்றும் நமது சனாதன தர்மத்தை பற்றியும் மிகவும் சிறப்பாக விளக்கினார்கள். மேலும் "வேதபாரதி மாத இதழ், பிடி அரிசி திட்டம், கோடி காயத்ரீ ஜப யக்ஞும் குறித்தும் சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் புது உறுப்பினர் சேர்க்கை மற்றும் கோடி காயத்ரீ ஜபயக்ஞும் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. மேற்படி நிகழ்ச்சியை வேதபாரதி அமைப்பின் பொறுப்பாளர்கள் திரு.சந்திரசேகர் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்தனர். விழாவின் இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் திரு.சுப்பிரமணிய சாஸ்திரிகள், குடும்பத்தினர் தேனீர் உபசரிப்பு அளித்தது மிகவும் பாராட்டுக்குறியது.

# ஸ்ரீ மணவாள மாமுனிகள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

மாறன் கலையாகிய திருவாய் மொழியே இவருக்கு உணவு! நம்மாழ்வாரை அன்றித்தெய்வம் வேறு இல்லை என வாழ்ந்த மதுரகவியின் நிலையே இவரது நிலை!.

பரம சாதுவாய், அடக்கம், அன்பு, எளிமை, பொறுமை முதலிய இனங்களாலே பெரிதும் கொண்டாடத்தக்கவராக விளங்கியவர் மணவாள மாமுனிகள்.

திருமந்த்ரார்த்தம், தத்துவத்திராய வியாக்கியானம், ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம், ஆச்சாரியஹ்ருதய வ்யாக்கியானம் முதலியவற்றை எழுதியுள்ளார். மேலும் ஞானசாரம், பிரமேயசாரம் என்னும் நூல்களுக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்!.

மேலும் வடமொழியில், யதிராஜவிம்சதி, தேவராஜ மங்களம், பிரமாணசங்கிரஹம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

செந்தமிழ் மொழியில் உபதேச ரத்தினமாலை, திருவாய் மொழி நூற்றன்தாதி, ஆர்த்திப் பிரபந்தம் திருவாரதனக்கிரமம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்!.

ஸ்ரீமணவாள மாமுனிகள் தாம் வாழ்ந்த காலத்திலும் தம்மைச் சரணடைந்த சீடர்களில் எட்டுபேரைத் தேர்ந்தெடுத்தார் அவர்கள் வருமாறு :-

1.வானமா மலை ஜீயர், 2.பட்டர்பிரான் ஜீயர், 3. திருவேங்கட ராமானுஜஜீயர் 4.கோயில் கந்தாடை அண்ணன், 5.பிரதிவாத பயங்கர் அண்ணன் 6. எறும்பியப்பா 7.அப்பிள்ளை 8.அப்புள்ளர்

இவர்கள் மூலம் ஸ்ரீவைணவ சமயமும்

ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களும் எங்கும் பரவித் தழைக்க ஏற்பாடு செய்தார்! இவர்களே அஷ்டதிக் கஜங்களாக இருந்து வைணவத்தை வளர்த்தனர்!

இவ்விதம் பல்லாற்றாலும் சிறப்புவாய்ந்த ஸ்ரீமணவாள மாமுனிகளின் திருவடிகளைப் போற்றி வாழ்வோம்.

அடியார்கள் வாழ, அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ
கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ
மணவாள மாமுனிகள் இன்னும் ஒரு நூற்றாண்டிரும்!

முற்றும்.



**ஸ்ரீ கோகுல கிருஷ்ண கோசாலை**

**கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபல் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**660 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**
ஊத்துக்கோட்டை, திருவள்ளூவர் - 602 023

**8940224744 / 9363111799**

# இராமாயணம் (வேதபாரதி) காட்டும் வாழ்வியல்

அயோத்தி நகரம் மிகப்பரந்த பூமி, மனுவினால் நிர்மாணம் செய்யப்பட்ட நகரம். அந்த நகரத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் இருபுறமும் சரயூ நதிபாய்கின்றது. இந்த நகரத்தை நீதி சாஸ்த்ர நூல்கள் கூறியபடி தசரதன் ஆட்சி செய்தான். இதில் தசரதன் மைந்தனாக இராமர் அவதரித்தார் அதனால் தான் அயோத்தி நகரம் மோக்ஷம் அளிக்கும் ஸ்தலங்களில் ஒன்றாக இருக்கிறது. “அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திக, பரிதுவாராவதி சைவஸ்ப்த இதோ மோக்ஷதாயிகா என்று கூறுகின்றோம். தசரதன் ஆட்சியில் உள்ள குடிமக்கள் பண்பட்டவர்கள். கல்வி பயின்றவர்கள், நல்ல உழைப்பாளிகள் என்று வால்மீகி கூறுகிறார். **மக்கள் அறமுறையில் செல்வத்தை வளர்த்தார்கள். அதனால் குடும்பவளம், சமூக வளம், தேசவளம் சிறப்பாக இருந்தது.** மக்கள் நியாயமானவர்கள், நீதிமான்கள், கருணை உள்ளம் கொண்டவர்கள். பேராசை என்பது கடுகளவும் கிடையாது. ஆட்சி தர்ம நெறியில் நடப்பதால் உழைப்பிற்கு ஊதியம் பல மடங்காக கிடைத்தது. அயோத்தியை பூலோக சொர்க்கம் என்று கூறுலாம்.

தசரதன் அறநெறியில் ஆட்சி புரிந்ததால் மக்கள் நிம்மதியாக மன அமைதியுடன் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். யுத்தம் நடக்காத பூமி அயோத்தி அந்த அளவிற்கு தசரதன் நாட்டை பாதுகாத்து வந்தான். யுத்தத்தால் பிடிக்க முடியாத நகரம் என்பதால் அயோத்தி என்றபெயரும் அதற்கு உண்டு.

தேனீ மலரில் இருந்து தேன் எடுப்பது போல் அரசனின் வரி விதிப்பு மக்கள் தாங்கக்கூடியதாக

இருந்தது. அதனால் மக்கள் முறையாக வரி செலுத்தினார்கள். குற்றங்களுக்கு ஏற்றபடி பாரபட்சமில்லாமல் தண்டனை வழங்கும் முறைஇருந்தது. அதனால் குற்றங்கள் குறைவாக, ஏன் குற்றவாளிகளே இல்லாத உத்தமர்களைக் கொண்ட நாடாக அயோத்தி திகழ்ந்தது. எல்லோரும் சத்தியம் பேசுவதால் அங்கு பொய்க்கு இடமே இல்லை. மக்கள் ஒருவர் கூட தானம் வாங்கும் நிலையில் இல்லாததால் தானம் செய்பவர்களுக்கு வேலையே கிடையாது. மக்கள் தன்நிறைவுடன் செல்வச் செழிப்பாக இருந்தார்கள். உணவுப்பொருட்களுக்கு பஞ்சமில்லாத நாடு. பொறாமை என்றதீய குணம் மக்களிடம் இல்லை. எல்லோரும் பரிசுத்தமான மனதுடையவர்கள். வீதிகள் எப்பொழுதும் தூய்மையாக இருக்கும். அதன் பக்கவாட்டில் மரம், செடி, கொடிகள் இருப்பதால் நகரம் எப்பொழுதும் குளுமையாக இருக்கும்.

நவரத்தின வியாபாரிகள் கூட்டம் கூட்டமாக அயோத்தி நகருக்கு வருவார்கள். சாலைகளில் ஆங்காங்கே ரத்தினக்குவியல்கள் இருக்கும். மக்கள் தெய்வநம்பிக்கை உடையவர்கள். நான்கு வர்ண மக்களும் செல்வச் செழிப்போடு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். வழிப்போக்கர்களுக்கு நகர மக்கள் நல்ல விருந்தோம்பல் செய்வார்கள்.

அயோத்தி நகர மக்கள் மிகவும் நல்லவர்கள். வீரர்கள் தைர்யம் நிரம்பியவர்கள். சொல், செயல், மனம் மூன்றிலும் தூய்மை படைத்தவர்கள். அரசவிஸ்வாசிகள். பெருமையானவர்கள். அதர்மத்தை விலக்கியவர்கள்.

தொடரும்...

**காந்தாமணி நாராயணன்.**

## பசு - சர்வரோக நிவாரணி

*சென்றமாத தொடர்ச்சி...*

*(ஈ) ஒவ்வொரு வாகனத்திலும் ஒரு உதவியாளர் கவனிப்பதற்கு அவசியம் இருக்க வேண்டும்.*

*(உ) மாடுகள் ஏற்றப்படும் வாகனங்களில் வேறு எந்தவிதமான பொருட்களையும் ஏற்றக்கூடாது.*

*(ஊ) மாடுகள் பயணத்தின்போது அடிபடாமல் பாதுகாக்க இவற்றின் முகங்கள் வாகனத்தின் முன்புறம் இருக்கும் வகையில் ஏற்றப்பட வேண்டும்.*

**பிரிவு – 50 :** *200 கிலோ வரை எடையுள்ள மாடு ஒன்றிற்கு 1 சதுர மீட்டரும், 200 லிருந்து 300 கிலோ வரையுள்ளவைக்கு 1.20 சதுர மீட்டரும், 300 லிருந்து 400 கிலோ வரையுள்ளவைக்கு 1.40 சதுர மீட்டரும் 400 கிலோக்கு மேல் உள்ளவற்றிற்கு தலா 2 சதுர மீட்டரும் இடம் ஒதுக்கி வாகனத்தில் மாடுகள் ஏற்றப்பட வேண்டும்.*

## திரும்பிப் பார்ப்போம் – செயல்படுவோம்

*தாயாக இருந்து மரணத்திற்குப் பிறகும் மயானத்திற்கு கொண்டு செல்ல பால் கொடுக்கும் பசு ஒரு மிருகமல்ல. நம் குடும்பத்தில் ஒரு (அங்கத்தினர்) அங்கம். பசுவினங்களின் எண்ணிக்கையும், அவை ஆனந்தமாக வாழும் சூழலுமே ஒரு நாட்டின் வளமையைக் குறிக்கும். எங்கெல்லாம் பயத்தோடு பசுக்கள் வாழ்கின்றனவோ அந்நாட்டில் அதர்மம் தலைதூக்கும்.*

*உலகின் மையப் பகுதியிலிருந்து எண்திசையும் தர்மங்கள் தழைக்கச் செய்துவரும் “பாரத தேசத்தில்” கடந்த பல்லாண்டு காலமாக சூது கவ்வும் – ஆனால், தர்மமே வெல்லும்” என்னும் முதுமொழிக்கிணங்க தற்போது மெல்ல மெல்ல விழிப்புணர்வு பெற்று*

வருகிறது நம்பாரத சமுதாயம்.

பல வழிகளில் பயணித்தாலும் பிராமண சமூகம் தனது சொந்த பாதையை மறக்காமல் செல்லுமிடமெல்லாம் தர்ம காரியங்களை செய்து வருகிறது. கோமாதக்களுக்கும் சம்ரட்சணம் செய்யப்பட்டு வருகிறது. பிராமண சமுதாயம் அச்சத்தை தவித்து பசுக்கள் பாதுகாப்பிற்கு விழிப்புணர்வு பிரச்சாரம் செய்ய வேண்டும். அவற்றைஅறுவைக் கூடங்களுக்கு செல்வதை தடுக்க சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மீண்டும் பாரத தேசத்தை வளமான தேசமாக உருவாக்குவதற்கு பசுக்களை பாதுகாப்போம். உங்களது ஒவ்வொருவரின் சிறுசிறு உதவிகளை (பொருளாக இருந்தாலும்) பசுக்களுக்காக கொடுங்கள். எண்ணற்ற“கோ” சாலைகள் இருக்கின்றன. மேலும், கோவில் அர்ச்சகர்கள் கிராமப் புறங்களில் இருப்போர் பசு வளர்க்க விருப்பத்தோடு உள்ளனர். அவர்களுக்கு உதவி செய்வதோடு புண்ணியம் சேர்ப்போம்.

நாட்டு மாடுகள் தேவைப்படுவோர் அல்லது அவற்றைப் பற்றிய விபரங்கள் அறிய விரும்புபவர்களுக்கு வழிகாட்டுகிறோம். “கோ” தானம் செய்பவர்களுக்கு அதைப் பெற்று கொள்பவர்களின் தொடர்பு தேவைப்பட்டால் அதற்கும் உதவி செய்கிறோம்.

பாரம்பரிய, புராண, ஆன்மீக, கடந்த கால ஆவினங்கள் ஆனந்தமாக இருந்த பாரதத்தை திரும்பி பார்ப்போம். மீண்டும் அவற்றைநிலைநிறுத்த நாம் ஒவ்வொருவரும் செயல்படுவோம். ஒவ்வொருவரும் அவர்களது வாழ்நாளில் ஒரு பசுவையாவது தானமாக

கொடுப்போம். தினம் தினம் ஒரு கைப்பிடி புல்லாவது பசுவைத் தேடி கொடுப்போம். மாதம் ஒருமணி நேரமாவது பசுவிற்காக செலவழிப்போம்.

பசுவிற்கு சேவை செய்வோம் – கர்மாவிலிருந்து விடுபடுவோம்.

எல்லோரும் இன்புற்றிருக்க கோ மாதாவை பிரார்த்திக்கிறேன்.

முற்றும்.

**- ஆதிரையன்**

## நவராத்திரி விழா

*நாள் : 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை*
*இடம் : ஊரப்பாக்கம்*
*நேரம் : காலை 7.00 மணி முதல்*

ஸ்ரீ காயத்ரீ ஜபம், சிற்றுண்டி
ஸ்ரீ கன்யா பூஜை
ஸ்ரீ பார்வதி பரமேஸ்வர பூஜை

சிறப்பு சொற்பொழிவு வழங்குபவர் :
**ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி**
தொடர்புக்கு :
**9444132170 / 9840838378 / 9382724321**
அனைவரும் வருக, வருக.

STAR Health Insurance
The Health Insurance Specialist



**மருத்துவ பாலிசி உங்களை செல்வந்தராக்காது ஆனால் உங்கள் குடும்பத்தை கடனாளியாக்காமல் பாதுகாக்கும்!!!**



**மருத்துவமனை வரவேற்பறையில் சிறிது நேரம் அமர்ந்து பாருங்கள் ஏன் மருத்துவ பாலிசி எடுக்க வேண்டும் என்பதற்கு பதில் கிடைக்கும்.**



**S. Narayanan - 9360277372**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY.com
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

## வேதபாரதி குரோம்பேட்டை

### பிரதி மாதம் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அனுஷபூஜை,

வேத வகுப்புகள், குழந்தைகளுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட, யுவஸ்ரீ வகுப்புகள், பாரத கலாச்சார விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, ஸ்லோகங்கள் ஸகஸ்ரநாம பாராயணம் முழுமையாக தெரிந்துகொள்ள தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தொடர்புக்கு :

**ஸ்ரீ வெங்கடேசன் - 8668139560**
**ஸ்ரீ வெங்கட்ராமன் - 9962837424**
**ஸ்ரீமான் ராம்குமார் சாஸ்திரிகள் - 9940430267**
**ஸ்ரீமதி ராஜலட்சுமி - 7092199447**

## வேதபாரதி சிறப்பு கூட்டம்

17.08.2022, புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு சென்னை, மந்தைவெளி, இராமசாமி தெருவில் உள்ள ஸ்ரீ சங்கர குருகுலத்தில் பெங்களூர் ஸ்ரீமான் டாக்டர் சந்திரசேகர் ஜி தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. பூஜ்யஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிகள் அருளால் வேதபாரதியில் நடந்து வரும் நிகழ்ச்சிகள் தொடர்பாக விளக்கப்பட்டது. ஸ்வாமிகளுடைய தீர்க்க தரிசணம் எல்லோரையும் வியப்படையச் செய்தது. மேலும் பெங்களூரில் ஆரம்பி க்க உள்ள சங்கர குருகுலம் குறித்த தெளிவான விளக்கங்கள் டாக்டர் ஸ்ரீ சந்திரசேகர் மூலமாக எல்லோருக்கும் சொல்லப்பட்டது. நாமும் பெங்களூரில் ஆரம்பிக்க உள்ள சங்கர குருகுலத்தில் சேர்ந்து பயன் பெறுவோம்.

வேதபாரதி.

Find Your Partner



Best of Luck

Brahmin Kalyanam.com

BK MATRIMONY.com

An Auspicious Begining...

(Exclusive Portal for Brahmins)

பிராமணர்களுக்கு மட்டும்

**Register & Get**

Brides / Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
Membership Fees Rs.2000 only

Astro Guidance By:

**Thethiyur V J Raman**

Aathmartha Jothidar

89397 02500

brahminkalyanam.com@gmail.com


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
www.wopper.in
WOPPER
Fluid Chemistry

# கோடி ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம ஜப யக்ஞம் ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம், திருப்பூர்.

*பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆசிகளுடன் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம மண்டலி மற்றும் வேதபாரதி ஏற்பாடு செய்த ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம் 14.08.2022 அன்று காலை முதல் திருப்பூர் வாலிபாலையம் குமாரசாமி கல்யாண மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*காலை 6.00 மணி முதல் கடந்த 4 மாதங்களாக காயத்ரீ ஜப யக்ஞத்தில் உறுப்பினர்களாக உள்ள அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் ஹோமத்தில் கலந்து கொண்டார்கள்.*

*திருப்பூர் வேத விற்பன்னர்கள், சிவாச்சார்யர்கள் வருகை புரிந்து ஸ்ரீ கணபதி ஹோமம், கோ பூஜை செய்து விழா இனிதே துவங்கியது. ப்ரம்மஸ்ரீ நாராயண சாஸ்த்திரிகள் ஸ்ரீ விஷ்ணு மண்டலி தலைவர் டாக்டர் நடராஜன், ஸ்ரீமதி லட்சுமி தம்பதியர்கள் திருப்பூர் தொழில் வளம், தேச நன்மைக்காகவும் ஸங்கல்பம் செய்து கொண்டார்கள்.*

*12 ஹோமகுண்டங்களில் 8 விதமான திரவியங்களுடன் ஸ்ரீ காயத்ரீ ஹோமம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 10.30 மணி முதல் கோடி விஷ்ணு ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம் பூர்த்தி விழா ஆரம்பமாகியது.*

*ஊர்பிரமுகர்கள் குத்துவிளக்கு ஏற்றி, ஸ்ரீமதி அம்பிகா சுரேஷ் அவர்கள் இறைவணக்கம் பாட ஸ்ரீ டாக்டர் நடராஜன் வரவேற்புரை ஆற்றினார்கள். விழாவின் முத்தாய்ப்பாக ஸ்ரீஸ்ரீ சிவயோகானந்த ஸ்வாமிகள் சின்மயா மிஷின் மதுரை அவர்கள் மிகத் தெளிவாக 300க்கும் மேற்பட்ட நம் சகோதர சகோதரிகள் பெருமைப்படும் வகையில் ஹிந்து சனாதன தர்மத்தின் மேன்மையும், நாம் கடைப்பிடிக்க*

வேண்டிய தர்மங்கள் பற்றியும் சொல்லிக் கொடுத்தது மிக பயனுள்ளதாகவும், மிக மேன்மையாகவும் அமைந்தது.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் மிகச்சிறத்தையாக பாராயணம் செய்தார்கள். ஸ்ரீ வேணுகோபால் மற்றும் வேதபாரதி சென்னை, அன்பர்கள், ஆடிட்டர் ஸ்ரீ ராமநாதன் அவர்கள் வழிகாட்டுதலில் மிக நேர்த்தியாக நடைபெற்றது. விழாவில் எல்லோரையும் வேதபாடசாலை குழந்தைகள் சொன்ன வேத மந்திரங்கள் நம் கலாசார பெருமையை உணரச் செய்தது.

- ஆசிரியர்.



**விவாஹம்**

**21.08.2022 ஞாயிற்றுக்கிழமை**

கோவை வேதபாரதி Co-ordinator

சிரஞ்சீவி **ஹரிஷ்** & சௌபாக்யவதி **R.அக்ஷயா**

திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. வேதபாரதி அறங்காவலர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

உ

ஸ்ரீ குருவே சரணம்

**வேதபாரதி**

வழங்கும்

## பெண்மையைப் போற்றுவோம்

**பெண்களால் பெண்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சி**

**பிரதிமாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 6.30 மணிக்கு ஆன்லைன் வழியாக**

**அனைவரும் வருக!**

**மேலும் தொடர்புக்கு : 9443495950**



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

## லிகித ஜபம்

இறைவனின் பேரருளை பெற பல்வேறு மார்க்கங்களை நம் புராணங்களிலும், சாஸ்த்தரங்களிலும் கூறப்பட்டு இருந்தாலும் தற்போதைய அவசர உலகில் நேரமின்மை, மற்றும் பல அலுவல்கள் என்ற போர்வையில் நாம் பல வழிபாடுகளை மெது மெதுவாக இழந்து அல்லது தவிர்த்து வருகிறோம். இதனாலோ அல்லது வேறு பல சூழ்நிலைகளாலோ மன உளைச்சல், பலவித நோய்கள், குடும்பத்தில் குழப்பங்கள் என்று எங்கு நோக்கிலும் மனித குலம் அவதிப்பட்டுக் கொண்டு வருகிறது. இத்தகைய அவதிகள், சீற்றங்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ள பகவானும் அவ்வப்போது நமக்கு நல் உபாயங்களை காட்டிக் கொண்டு தான் வருகிறார். அதில் ஒன்று நாம ஜாபம் மிகப் பிரபலமாகவும், சக்தி வாய்ந்தும் ஆன 'ராம' ஜபம் எழுதுவது நம்மில் நிறைய பேருக்கு தினப் பழக்கமாக இருக்கலாம். அதுபோலவே மற்றுமொறு சிறந்த ஜபம் தான் "நாமத்ரய ஜபம்" உண்மையில் இது நம்மை காக்கும் ஒரு அஸ்தரம் (ஆயுதம்) தீய நோய்களையும், எதிர்மறை சக்திகளையும் எதிர்த்துப் போராடும் ஒரு மாபெரும் அஸ்தரமாக இந்த ஜபம் செயல்படுகிறது. அதாவது பாதுகாக்கிறது. ஜயம் கொடுக்கும் இந்த ஜபம் எழுதுவது வெகு எளிமை.

**அதி சக்தி வாய்ந்த வார்த்தைகளாகவது :**

**அச்யுதாய நம : அனந்தாய நம : கோவிந்தாய நம :**

இந்த லிகித ஜபம் எழுதி பயன்பெற்றவர்கள் ஏராளம். தங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு, திருமணங்களுக்கு, நோய்களிலிருந்து விடுபட மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த புத்தகம் இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த லிகித ஜெப புத்தகம் வேண்டுவோர் அனுகவேண்டிய **தொலைபேசி எண்.9345725265.**

★ அடக்க விலை ரூ.30/- பணம் கொடுக்க விரும்புபவர்கள் G-Pay No.9345725265 என்ற எண்ணில் அனுப்பலாம்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805 (or) Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th September 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.